செய்தி வெளியீடு எண் 791 15/11/08

## பத்திரிக்கைச் செய்தி

## ஆதிதிராவிடர் நலத்துறை தலைமை ஆசிரியர்கள் ஆய்வுக்கூட்டம்

தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளின் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களின் கூட்டம் இன்று 15.11.08 சென்னை மாவட்ட ஆட்சியர் வளாக கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கில் காலை 10.30 மணியளவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ. தமிழரசி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்ற ஆண்டு இறுதித் தேர்வில் தேர்ச்சி விகிதம் குறைவாக பெற்ற பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் இதர ஆசிரியர்களுக்கு மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சரவர்களும், அதிகாரிகளும் அறிவுரை வழங்கினார்கள். பின்னர் இந்த ஆண்டு 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு நடைபெற்ற காலாண்டுத் தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறித்த ஆய்வு நடைபெற்றது. தேர்ச்சி விகிதம் குறைந்த பள்ளி தலைமையாசிரியர்கள் சிறப்பு வகுப்புகள் நடத்தி தேர்ச்சி விகிதத்தை உயர்த்த வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்கப்பட்டது. இவ்வாண்டு 5.7.08 அன்று ஏற்கனவே தலைமை ஆசிரியர்கள் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கடந்த ஆண்டுகளில் இதேபோல் நடத்தப்பட்ட தலைமையாசிரியர்களின் கூட்டங்களின் விளைவாகவும் மற்றும் இடைநிலை ஆசிரியர்களாக பணியமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு தகுதியானவர்களை 100 சதவீதம் பதவி உயர்வு அளித்ததன் விளைவாகவும் முதன் முதலாக மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தன் விளைவாகவும் 2005-06 ம் ஆண்டில் 54 சதவீதமாக இருந்த 12 ம் வகுப்பு தேர்ச்சி விகிதம் தற்போது தற்போது 70 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேபோல் 2005-06 ம் ஆண்டில் 70 சதவீதமாக இருந்த 10ம் வகுப்பு தேர்ச்சி விகிதம் தற்போது 78 சதவீதமாக உயர்ந்துள்ளது.

ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் 12ஆம் வகுப்பில் 1000 மதிப்பெண்களுக்கு மேல் 81 மாணவ, மாணவியர் பெற்றுள்ளனர். முதன்முதலாக 12ஆம் வகுப்பில் 4 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் 100 சதவீதம் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. தேனி மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் மாணவர் ஒருவர் 1133 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். அதேபோல் 10ம் வகுப்பில் 919 மாணவ, மாணவியர் 400 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுள்ளனர். 10ம் வகுப்பில் 22 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் 100 சதவீதம் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. கன்னியாகுமரியிலுள்ள உண்டி உறைவிட மாணவர் ஒருவர் 483 மதிப்பெண்கள் எடுத்து ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் முதல் மாணவர் என்ற பெருமை பெற்றுள்ளார். இவற்றிற்கெல்லாம் காரணமாக திகழ்வது என்னவென்றால் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 5வது முறையாக ஆட்சிபீடத்தில் அமர்ந்தவுடன் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட ஆணையிட்டதற்கிணங்க ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இடைநிலை ஆசிரியர்களிலிருந்து பட்டதாரி ஆசிரியராக பதவி உயர்வு பெற பொருளியியல் மற்றும் வணிகவியல் பயின்ற ஆசிரியர்களையும் நியமிக்கலாம் என ஆணை வழங்கியதைத் தொடர்ந்து ஆசிரியப் பெருமக்கள் மனநிறைவுடன் பணிபுரிகின்றனர்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.வ.கனகராஜ்.இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை ஆணையர் திரு மாலிக் பெரோஸ்கான்.இ.ஆ.ப., மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்

முதுநிலை நேர்முக உதவியாளர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,